d

# முதன்மை மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

**முன்னிலை : திருமதி. A. முத்துசாரதா, B.L., P.G.D.P.M.**
**முதன்மை மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்**

2026 ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 17 ம் நாள் செவ்வாய்க்கிழமை

**<u>அசல் வழக்கு எண்.139/2018–ல் இ.ம.எண். 3/2025</u>**

R. செந்தில்குமார்

.... மனுதாரர் /பிரதிவாதி

/ எ தி ர் /

K. ராமசாமி

.... எதிர்மனுதார்/வாதி

இந்த மனு என் முன்னர் 6.2.2026 ம் நாளன்று விசாரணைக்கு வந்த போது மனுதாரர்தரப்பில் வழக்கறிஞர் திரு. M. ராஜாராமன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. மாரப்பன் மற்றும் M. விக்னேஷ் மாதவன் ஆகியோர்கள் முன்னிலையாகியும், மனு உரை, எதிருரை மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும் இன்று இம்மன்றத்தால் பிறப்பிக்கப்படும் :

**<u>உ த் த ர வு</u>**

மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை பெற்றுக்கொள்ள அனுமதியளிக்கக் கோரி உ.வி.மு.ச கட்டளை 8 விதி 9 மற்றும் பிரிவு 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது

2) **<u>மனுதாரர்/பிரதிவாதியால் மனுவிற்கு ஆதரவாக தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் பின்வருமாறு</u>** :–

எதிர்மனுதாரர்/ வாதியிடம், மனுதாரர்/பிரதிவாதி கடனாக பெற்ற ரூ.18,00,000/– யை வட்டியுடன் திரும்பப் பெறுவதற்காக அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரருக்கு ரூ.18 லட்சம் கடன் கொடுக்கும் அளவுக்கு போதிய வசதி வாய்ப்பு இல்லை. அவ்வாறு ரூ.18 லட்சம் கடன் கொடுக்கும் அளவுக்கு வாய்ப்பு உள்ளது என்றால் அதற்கான வருமான வரி சான்றினை தாக்கல் செய்ய வேண்டும். மேலும், தாவா கடனுறுதிச்சீட்டில் உள்ள கையெழுத்தும், கைரேகையும் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மேற்படி விபரங்களையெல்லாம் நீதிமன்றத்தின் கவனத்திற்கு முன்பாக கொண்டுவருவதற்காக கூடுதல் எதிர்வழக்குரையை தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே, மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை பெற்றுக்கொள்ள அனுமதியளிக்கக் கோரி இம்மனுத் தாக்கல்.

3) **<u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:–</u>**

மனுச்சங்கதிகள் பொய்யானவை. உண்மைக்குப் புறம்பானவை. அசல் வழக்கானது கடந்த 2018ம் வருடமே தாக்கல் செய்து மனுதாரர் அவரது வழக்கறிஞர் மூலம் முன்னிலையாகி அதன்பிறகு மேற்படி அசல் வழக்கில் அவரது தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் அவருக்கு எதிராக ஒருதலைபட்ச தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது. அந்த தீர்ப்பின் பேரில் எதிர்மனுதாரர்

தீர்ப்பு கடன் தொகையை மனுதாரர்/பிரதிவாதியிடமிருந்து வசூலிக்கும் வகையில் நி.ம.எண். 184/2019 மனுத் தாக்கல் செய்து அம்மனுவில் மனுதாரர் முன்னிலையாகி மேற்படி தீர்ப்பாணையை ரத்து செய்யக்கோரி மனுச் செய்துள்ளார். அம்மனுவுடன் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் முழு விபரங்களுடன் கூடிய எழுத்துமூல வாதுரை தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. அதன்பிறகு ஏற்பட்ட நடவடிக்கையில் இந்நீதிமன்றத்தில் I.A.No.1/2022 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் மனுதாரர்/பிரதிவாதி சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் CRP(MD).No.2338/2025 ஆக சீராய்வு மனுத்தாக்கல் செய்ததில் மேற்படி உயர்நீதிமன்றம் மேற்படி சீராய்வு மனுவை அனுமதித்தும், இந்த அசல் வழக்கை உயர்நீதிமன்ற உத்தரவு கிடைத்த 6 மாதங்களுக்குள் முடிக்கவேண்டும் என உத்தரவிட்டுள்ளது. அதன்பேரில் இந்த எதிர்மனுதாரர் தரப்பில் கடந்த 17.11.2025 ம் தேதி எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியத்தை வாதி தரப்பு நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கடந்த 20.11.2025 ம் தேதி எதிர்மனுதாரரை முழுமையாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டுவிட்டது. மேற்படி குறுக்கு விசாரணையானது மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விசயங்களைத் தாண்டி தற்பொழுது மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையின் அடிப்படையில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது. அதன்பிறகு எதிர்மனுதாரர் தரப்பில் கூடுதல் சாட்சியம் விசாரிப்பதற்காக இவ்வழக்கு வாய்தா போடப்பட்ட நிலையில் மனுதாரர்/பிரதிவாதி இம்மனுவைத்

தாக்கல் செய்துள்ளார். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை அசல் வழக்கை 6 மாதத்தில் முடிக்கச் சொல்லி உத்தரவிட்ட நிலையில் ஏற்கனவே மூன்று மாதம் முடிந்துவிட்ட நிலையில் இவ்வழக்கை நடத்தி முடிக்ககூடாதென்ற எண்ணத்திலேயே மனுதாரர்/பிரதிவாதி இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார். ஏற்கனவே தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விசயங்களும், தற்பொழுது தாக்கல் செய்யவுள்ள எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விசயங்களுக்கும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவைகளாக உள்ளன. கடனை திரும்ப செலுத்தக்கூடாது என்ற கெட்ட எண்ணத்திலேயே மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

**4)** இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

**5)** இரு தரப்பிலும் சாட்சிய, சான்றாவணங்கள் ஏதும் முன்வைக்கப்படவில்லை. இரு தரப்பும் கேட்கப்பட்டது.

**<u>6) தீர்வு</u>**

மனுதாரரின் மனுவும், எதிர்மனுதாரரின் எதிருரையும், வழக்கு கோப்பும் ஆராயப்பட்டது. மனுதார் வாதியாக இருந்து அசல் வழக்கினை recovery of money suit தாக்கல் செய்து, அசல் வழக்கில் வா.சா.1–ன் சாட்சியம் முடிக்கப்பட்டு, குறுக்கு விசாரணை சாட்சியத்திற்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பிரதிவாதி மனுதாரராக இருந்து தன் தரப்பில் தாக்கல் செய்யப்படும்

எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்கனவே தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விசயங்களும், தற்பொழுது தாக்கல் செய்யவுள்ள எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விசயங்களுக்கும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவைகளாக உள்ளதாகவும், கடனை திரும்ப செலுத்தக்கூடாது என்ற கெட்ட எண்ணத்திலேயே மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாக றுப்பு தெரிவிக்கப்பட்டு வருகிறது.

**7)** வழக்கு கோப்பு ஆராயப்பட்டதிலிருந்து, எதிர்மனுதாரர், மனுதாரர் மீது ரூ.24,44,400/ம் அசல் தொகை ரூ.18 லட்சத்திற்கு பிராது தேதி முதல் பின்வட்டியுடன் செலுத்தக் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எதிர்மனுதாரர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, குறுக்கு விசாரணை சாட்சியத்திற்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதும், அசல் வழக்கினை 6 மாத காலத்திற்குள் விரைந்து முடிக்கவேண்டுமென்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டுள்ள நிலையிலும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யவிருக்கும் கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்று, அதனையும் பரிசீலித்து அசல் வழக்கில் ஒரு இறுதியான தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுவதால் இம்மனுவினை அனுமதிக்கப்படத்தக்கது என இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவில்**, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, கையொப்பமிடப்பட்டு, 2026 ம் நாளன்று பிப்ரவரித் திங்கள் 17 ம் நாளாகிய இன்று திறந்த அவையில் அவையறியப் பகரப்பட்டது.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.02.26 16:28:16 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**திண்டுக்கல்.**

இரு தரப்பிலும் சாட்சிய, சான்றாவணங்கள் : இல்லை.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.02.26 16:28:19 +0530

**மு மா நீ.,**
**திண்டுக்கல்.**

முதன்மை மாவட்ட நீதிமன்றம்
திண்டுக்கல்
அ.வ.எண் 139/2018–ல்
இ.ம.எண் 3/2025
நாள் 17.02.2026
உத்தரவு